***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 2 (LW3)***

| | |
|---|---|
| *Name* | மோகன் |
| *Father/Husband's Name* | ராஜகோபாலன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *58* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட் டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெரிய கம்மாளத்தெருவில் அடகு கடை வைத்து நடத்தி வருகிறேன். அசா.1 ஐ தெரியும்.

கடந்த 25.03.2015 ம் வருடம் மாலை 06.30 மணிக்கு மேல் மன்னார்குடி வெண்ணெய் தாழி உற்சவத்தன்று அசா.1 பரபரப்புடன் எனது கடைக்கு தெற்கு பக்கத்தில் உள்ள அவரது கடையான பெரிய கம்மாளத்தெருவில் அடகு கடை மற்றும் நகை கடையில் இருந்து வெளியே வந்தார். நான் என்னவென்று விசாரித்தபோது அசா.1 ன் கடையில் இருந்து ஒரு டிரேயில் இருந்த அனைத்து நகைகளும் திருட்டு போய் விட்டதாக என்னிடம் கூறினார். நாங்கள் பெரிய கம்மாள தெரு முழுவதும் இரண்டு திசைகளிலும் கண்காணிக்க தெரு முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் 2013 ம் ஆண்டில் இருந்தே பொருத்தியிருக்கிறோம். நாங்கள் கண்காணிப்பு கேமராவை பார்த்ததில் மூன்று பெண்கள் அசா.1 ன் கடைக்குள் செல்வதும் பின்பு 4 வதாக ஒரு பெண் அதே தெருவில் வடக்கில் இருந்து வந்து அசா.1 ன் கடையை பார்த்துவிட்டு சற்று தூரம் சென்று நிற்பதும் அதே தெருவில் நிற்பதும் அதே தெருவில் ஒரு ஆட்டோ காத்தியிருந்தது. அதில் அசா.1 ன் கடையில் இருந்து வந்து

மூன்று பெண்களும் அந்த ஆட்டோவில் ஏறி சென்றனர். அந்த மூன்று பெண்களில் சற்று ஒல்லியாகவும், உயரம் குறைவாகவும் இருந்த நபர் அசா.1ன் கடையில் இருந்து ஷோகேஸில் இருந்த டிரேவை எடுத்ததை நாங்கள் சிசிடிவி கேமராவில் பார்த்தோம். மற்ற இரண்டு பெண்களும் குண்டாக இருந்தார்கள். நான் தற்சமயம் அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அசா.1ன் கடையில் இருந்த நகைகளை திருடியவர்கள் அவர்கள் தான் என்று சிசிடிவி கேமராவை பார்த்து தெரிந்து கொண்டேன். அன்றையதினமே காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோம். அன்றையதினம் வெண்ணெய் தாழி திருவிழா என்பதால் பாதுகாப்பு பணியில் இருப்பதாலும், மறுநாள் வந்து பார்ப்பதாகவும் கூறி மறுநாள் வந்து பார்த்தார்கள். இச்சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள். நாங்கள் சிசிடிவி மேராவை அவர்களிடம் போட்டு காண்பித்தோம். அசா.1ன் கடையில் இருந்த சிசிடிவி கேமராவையும்(கடைக்குள் நகைகளை திருடும்போது பதிவான காட்சிகள்) மேலும் எனது கடை வாசலில் இருந்த சிசிடிவி கேமரா தெருவில் எதிரிகள் ஆட்டோவில் ஏறியபோது பதிவான காட்சிகள் ஆகியவற்றை போலீசாரிடம் கொடுத்தோம். பிறகு 6 மாதம் கழித்து திருட்டுபோன நகைகளை கிடைத்துவிட்டதாக அசா.1க்கு தகவல் சொல்லி அசா.1 நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டார். மேற்படி சிசிடிவி கேமரா பதிவுகளை மறுநாள் போலீசாரிடம் ஒப்படைத்தோம்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் Chemical Engineering படித்த பட்டதாரி என்றால் சரிதான். நான் நகை அடகு கடை சங்கத்தின் தலைவர் என்றால் சரிதான். எங்களது சங்க பிரச்சனை மற்றும் கம்மாளதெருவில் உ ள்ள எந்தவொரு கடைக்கும் காவல் நிலையம் வரும் பிரச்சனைகளை நான் தான் காவல் நிலையத்திற்கு முன் நின்று வந்து செல்லக்கூடிய நபர் என்றால் சரிதான். பல பிரச்சனைகளுக்கு காவல் நிலையம் சென்று பரீட்சயமான நபர் என்றால் சரிதான். அசா.1 எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். அசா.1 இந்த நீதிமன்றத்தில் மனு செய்து இவ்வழக்கின் தடயசொத்துக்களை பெற்று சென்றதற்கு பிணையதாரர்களாக இருந்தேன் என்றால் சரிதான்.

சிசிடிவி மேராவின் functioning என்பது ஒரு பெரிய தொடர் வேலை என்றும், அதை பற்றி in depth ஆக தெரியுமா என்றால் play back செய்து பார்க்க மட்டும் தெரியும். in depth ஆக தெரியாது. முதல் விசாரணையில் நான் சொன்ன வகையில் கடையின் வாசலில் தென்புறமாக ஒரு பெண் சென்றார் என்ற விபரத்தை போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒல்லியான உயரம் குறைவான பெண் நகையை எடுத்ததாக சொல்லப்படும் விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அசா.1 ன் கடையில் உள்ள சிசிடிவி கேமராவிலும், எனது கடையில் உள்ள சிசிடிவி கேமராவிலும் போட்டு பார்த்ததாக சொல்லப்படும் விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் ஆட்டோவில் ஏறும் காட்சிகளை பார்த்ததாக சொல்லப்படும் விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாதரணமாக சிசிடிவி கேமரா மூலம் உள்ள பதிவுகளை copy, upload, download செய்வது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் மேற்படி copy, upload, download செய்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொன்ன வகையில் இன்று வெண்ணெய்தாழி வைபோகம் என்பதால் மறுநாள் வருவதாக போலீசார் சொன்ன விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் நான் சொல்லவில்லை.

copy, upload, download எனக்கு செய்யதெரியாத நிலையில் எந்த தரவுகளையும், போலீசார் என்னை விசாரித்தபோது நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அசா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு அருசனையாக முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததை சொல்கிறேன்.

Sd/--J.Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 3 (LW5)***

| | |
|---|---|
| *Name* | நரேந்திரன் |
| *Father/Husband's Name* | குபேந்திரன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *44* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெரிய கம்மாளத்தெருவில் குபேரன் ஜுவல்லரி என்ற நகை கடை வைத்துள்ளேன். அசா.1 ஐ தெரியும். எனது எதிரில் கடை வைத்துள்ளார்.

கடந்த 25.03.2015 ம் தேதியன்று மாலை 06.30 மணிக்கு மேல் மன்னார்குடி வெண்ணெய் தாழி உற்சவத்தன்று அசா.1 பதட்டத்துடன் அவரது கடையில் இருந்து வெளியே ஓடி வந்தார். நான் என்ன வென்று விசாரித்தபோது தன்னுடைய கடைக்கு மூன்று பெண்கள் வந்ததாகவும், கடையில் இருந்து ஷோகேஸில் டிரேயில் இருந்த நகைகளை திருடிவிட்டதாகவும், என்னிடம் கூறினார். மேலும், அவர் கடையில் 15 பவுன் நகை திருட்டுபோன அசா.1 என்னிடம் கூறினார். பின்னர் அசா.1 ன் கடையில் இருந்த சிசிடிவி கேமராவையும், அசா.2 ன் கடையில் இருந்து சிசிடிவி கேமராவை பார்த்து எதிரிகளை அடையாளம் கண்டு நானும், கோபி என்பவரும் எங்கள் தெரு முழுவதும் மற்றும் சந்தபேட்டை பேருந்து நிறுத்தம் வரை சென்று தேடி பார்த்தோம். நான் தற்சமயம் அசா.1 ன் கடையில் திருடிய பெண்களை பார்த்தால் அடையாளம்

காட்டமுடியும். சிசிடிவி கேமராவில் மிகவும் தெளிவாக இருந்தது. பிறகு 6 மாதம் கழித்து அசா.1 திருட்டு போன நகைகளை நீதிமன்றத்தில் திரும்ப பெற்றுக்கொண்டதாக தெரிந்து கொண்டேன். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அசா.1 கடையில் நகை திருட்டுபோன சம்பவம் எனக்கு கேள்விப்பட்டது தான். அசா.1 சொன்னது தான். அசா.1 க்கு ஆதரவாக முதல் விசாரணையில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிசிடிவி தரவுகளை பார்த்தாக சொல்லக்கூடிய சங்கதி அசா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க சொன்னது தான் என்றால் சரியல்ல.

Sd/--J.Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 4 (LW6)***

| | |
|---|---|
| *Name* | வடுகநாதன் |
| *Father/Husband's Name* | திருஞானம் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *60* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எலக்டீரியல் கான்டிராக்டராக வேலை செய்து வருகிறேன். 2006 ல் இருந்து 2011 ம் ஆண்டு வரை நான் மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றினேன். அசா.1 ஐ தெரியும்.

கடந்த 15.03.2015 ம் தேதியன்று மாலை 06.30 மணியளவில் வெண்ணெய் தாழி நடக்கும்போது அசா.1 ன் கடையில் இருந்த பரப்புடன் கடையில் இருந்து வெளியே வந்தார். நான் அருகில் இருந்த கோபி என்பவரின் கடையில் நின்று கொண்டிருந்தோம். அசா.1 அவருடைய கடையில் மூன்று பெண்கள் அவரது கடையில் திருடிவிட்டதாக எங்களிடம் கூறினார். சம்பவத்தன்று திருவிழா என்பதால் மறுநாள் இரவு 09.30 மணியளிவல் சம்பவ இடத்திற்கு வந்து திருட்டு சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். மேலும், சம்பவம் தொடர்பாகவும் விசாரணை செய்ததிலும், வரைபடம வரைந்ததையும் ஒரு பேப்பரில் எழுதி என்னிடமும், அசா.1 கடைக்கு எதிரில் ஆபரண தொழில் செய்யும் பக்கிரி என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டனர்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இச்சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தாரகள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தேசிய கட்சியை சேர்ந்த இந்த நகரத்தின் முக்கிய நபர் என்று சொன்னால் சரிதான். வேறோரு நபர்களுக்காக பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக காவல் நிலையம் சென்று வரக்கூடிய நபர் என்றால் சரிதான். காவல் துறை நபர்கள் எனக்கு நன்கு பரீட்சயமான நபர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் இருந்து என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. அதை படித்து காட்டினார்கள். அசா.1 க்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J.Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*

*CC.No.98/2017 – P.W. 1 சிவக்குமார் த/பெ. செல்லமுத்து*

*நாள் 16.09.2025*

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன விசயங்களை தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மோகன் என்பவரின் வீட்டு வாசலில் இருந்த வேம்பமரத்தில் இருந்த சிசிடிவி கேமராவை பார்த்துக்கொண்டு என் கடையில் இருந்து தெற்கு பக்கம் ஒரு பெண் நின்று கொண்டிருந்தார் பின்பு கடையில் இருந்த தெற்கு புறம் இருந்த நம்பர் பிளேட் இல்லாத ஆட்டோவில் எதிரிகள் மூவரும் மற்றும் அங்கிருந்த பெண் நான்கு பேரும் ஏறி சென்றுவிட்டனர் என்று சொன்ன விபரத்தை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் மறுநாள் இரவு 08.30 மணியளவில் சம்பவ இடத்தை வந்து பார்த்து விசாரித்தனர் என்று சொன்ன விபரத்தை புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கடையில் இருக்ககூடிய சிசிடிவி கேமராவை யார் பொருத்தினார்களோ அவர் தான் நிர்வகிக்கிறார் என்றால் இல்லை நான் தான் நிர்வகிக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சிசிடிவி கேமரா என்பது கேமரா DVR, அதனுடன் கூடிய லிங்கிங் டிவைஸ் ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2015 ம் வருட காலகட்டத்தில் எங்கள் கடையில் பொருத்தியிருந்த கேமரா system எல்லாம் வேறு என்றால் சரிதான். ஆனால் தற்போது தான் HD version ல் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2015 ம் காலக்கட்டத்தில் எங்கள் கடையில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை computer அல்லது laptop னுடைய உதவியுடன் தான் எடுக்கவோ, பார்க்கவோ முடியும் என்றால் சரிதான். எனக்கு computer உள்ளிட்ட உபகரணங்களை கையாள தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல அந்த காலக்கட்டங்களில் upload, download, copy என்பவை

பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இன்றில் இருந்து 5 வருடக்காலக்கட்டத்திற்குள் தான் சிசிடிவி கேமரா, கணிப்பொறி உபயோகம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கினுடைய எதிரிகள் மற்றும் ஏனய எதிரிகளின் விபரங்கள் எல்லாம் போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் தான் தெரியும் என்றால் சிசிடிவி கேமராவை பார்த்து தெரியும். சிசிடிவியை பார்த்து எனக்கு தெரியும் என்ற விபரம் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று சென்ற நகைகள் எல்லாம் என்வசம் இல்லை என்றால் என்னிடம் உள்ளது நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்றால் ஆமாம். எனது கடையில் இருந்து காணாமல் போனது சொல்லக்கூடிய நகைகள் உண்மையில் நான் சொன்ன வடிவில் வாங்கவில்லை என்றால் சரியல்ல. போலீசாரிடம் வேறு வடிவில் பெற்று அதனை நகைகளாக மாற்றி பின்னால் நீதிமன்றத்தில் இருந்து வாங்கி சென்றேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னப்படி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் சாட்சிகளாக இருக்ககூடிய மோகன், கோபி, நரேந்திரன், வடுகநாதன், பக்கிரி, நடராஜன், குமார் ஆகியோர்கள் எனக்கு வேண்டியப்பட்டவர்கள் என்றால் பக்கத்து கடைக்காரர், எதிர் கடை வைத்திருப்பவர்கள். சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்ததாகவும், அதனடிப்படையில் எதிரிகளை தெரிந்து கொண்டதாகவும், சொல்லக்கூடிய தகவல் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

உண்மையில் சிசிடிவி பதிவுகள் மற்றும் அதனுடைய தரவுகள் உண்மையில் இருந்திருக்கும் எனில் அதை நான் முன்னரே ஒப்படைத்திருப்பேன் என்றாலும், காவல் துறையினர் மூலம் நீதிமன்றத்திற்கு முன்பே அனுப்பட்டியிருக்கும் என்றால் சரியல்ல. (இனிமேல் இந்த நீதிமன்றத்திற்கு சிசிடிவி தரவுகள் வருமாயின் அது என்னால் சிருஷ்டை செய்து வரப்பெற்றதாக இருக்கும் என எதிரி தரப்பில் அசா.1 டம் கேள்வி முன்வைக்கப்பட்டது **ஏற்கெனவே அசா.1 ல் சம்பவம் குறித்தான சிசிடிவி பதிவுகள் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுக்கப்பட்டதாக புகாரிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ள நிலையில் இந்த கேள்வியை அசா.1 யிடம் கேட்பதற்கு முகாந்திரம் இல்லை என்று இந்த கேள்வியை அசா.1 யிடம் இருந்து கேட்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று தீர்மானிக்கிறது**).

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் இல்லை என்றாலும் முதல் விசாரணையில் எதிரிகளை தொடர்புபடுத்தி சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ தினத்திற்கு மறுநாள் இரவு சுமார் 08.30 மணியளவில் போலீசார் வந்தார்கள். என்னை விசாரித்து எழுதிகொண்டார்கள், அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். எனது கடையில் வைத்து கொடுக்கப்பட்ட புகாருக்கு மோகன், கோபி ஆகியோர் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்தார்கள்.

Sd/--J.Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.